# ஆற்றூர் என்.வி.கே.எஸ்., பள்ளியில் தொழில்நுட்ப கண்காட்சி

**அருமனை, டிச. 1–**

ஆற்றூர் என்.வி.கே.எஸ்., கல்வி நிறுவன குழுமம் சார்பில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கலைகளுக்கான கண்காட்சி நடந்தது.

டெக்னோவா – 2024 என்ற தலைப்பில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கலைகளுக்கான மெகா கண்காட்சி, பொழுதுபோக்கு பூங்கா போன்ற நிகழ்ச்சிகள் கடந்த 28ம் தேதி முதல் நேற்று வரை நடந்தது.

இந்நிகழ்ச்சிக்கு, என்.வி.கே.எஸ். கல்வி குழுமங்களின் செயலாளர் வக்கீல் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார்.



உயரம் தாண்டுதலில் தேசிய அளவில் மூன்று முறை தொடர்ந்து தங்க பதக்கமும், சர்வதேச அளவில் வெள்ளி பதக்கம் வென்றவரும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை., முன்னாள் ஆட்சி மன்ற உறுப்பினருமான டாக்டர் ஆறுமுகம் பிள்ளை கண்காட்சியை துவக்கி வைத்தார். இந்த நிழ்ச்சியில் பள்ளி மாணவ, மாணவிகள் தங்களது பல்வேறு படைப்புகளை காட்சி படுத்தினர்.

பல்வேறு பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்கள் கண்காட்சியை கண்டு களித்தனர்.